# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 03.08.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# சுபீட்சத்தின் நோக்கு பிரகடனத்தின் படியான ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு எங்கே?

## மட்டக்களப்பில் ஆசிரியர் சங்கம் போராட்டம்





(துதிமோகன்)

24 வருடகாலமாக நீடிக்கும் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கு வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரி நாடளாவிய ரீதியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் போராட்டமானது நேற்று மட்டக்களப்பிலும் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் உதயரூபன் தலைமையில் இடம்பெற்ற இப்போராட்டப் பேரணியில் அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## தொழில்நுட்பத்திற்கும் முதலீட்டுக்காகவும் எமது நிலத்தை சீனாவிற்கு தாரைவார்க்க வேண்டுமா?

இலங்கையை பொறுத்த வரையில் எமது ஆட்சியாளர்கள் எங்களுடைய வளங்களை பல நாடுகளுக்கு விற்கின்ற அதேவேளை பல நாடுகள் எமது வளங்களை சூரையாடுவதற்கு வழி வகுத்துள்ள வேளையிலே அதிகாதிக்கத்தை சீன ஆட்சியாக மாறிக்கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளிக்குடாவில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச மீனவர சங்கங்களுடனான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிளிநொச்சி பூநகரி பிரதச

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் கோரோனாதோற்று 20 ஆயிரத்தை தாண்டியது! 364பேர் பலி; 10லட்சம் பேரில் 7 லட்சம் பேருக்கு தடுப்பூசி!

### கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தௌபீக்



(காரைதீவு நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தீநுண்மியின் தாக்கம் மீண்டும் அதிகரித்திருக்கிறது.

மூன்றாவது அலையின் ஆரம்பத்தில் திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பிரதேசங்கள் அபாயகரமாக மாறி இருந்தது. எனினும் இடைநடுவில் சற்று தணிந்திருந்தபோதிலும் கடந்த இருவாரகாலமாக அந்நிலைமை மாறி தற்போது

02 ஆம் பக்கத்தில்...

## தீர்வு கிடைக்காவிட்டால் பாடசாலைக்கு போக மாட்டோம்

(காந்தன்)

அரச சேவையை வழமை போன்று முன்னெடுப்பது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கேற்ப செயற்படுமாறு கல்வி அமைச்சின் செயலாளரினால் கல்விசார் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று முதல் அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டும்.

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை வரவேற்றுள்ள கூட்டமைப்பு

ஐக்கிய நாடுகள் சபையுடன் பணியாற்றும் ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பதாக தெரிவித்துள்ளது.

டுவிட்டர் செய்தியொன்றை வெளியிட்டே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






## கிண்ணியா பிரதேச எல்லைகள் ஒடுங்கிவருகின்றன

(நமது நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேச எல்லைகள் ஒடுங்கி வரும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் மொஹிதீன் தெரிவித்தார்.

கட்சியின் அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத்

02 ஆம் பக்கத்தில்...

## கிளிநொச்சி இரணைமடு சந்தியில் அடாத்தாக வீதியின் குறுக்கே சுவர் எழுப்பியுள்ள இராணுவம்!

கிளிநொச்சி இரணைமடு சந்தியில் வீதிக்கு குறுக்காக படையினரால் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள கட்டுமானத்தை சட்டரீதியாக அகற்றுவதற்கு கரைச்சி பிரதேசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இரணைமடு சந்தியில் விபத்தை உண்டாக்கும் வகையில் படையினரால் சுவர் ஒன்று சீமெந்தினால் கட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த

02 ஆம் பக்கத்தில்...









## மண்டூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம்



(துறையூர் சஞ்சயன்)

தேசத்துக்கோயிலென்றும் சின்னக் கதிர்காமம் என்றும் போற்றப்படும் தில்லை மண்டூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் நேற்று திங்கட்கிழமை இரவு 8.00 மணிக்கு இடம்பெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் இ. ராகுலநாயகி, உதவி பிரதேச செயலாளர் சி.புவனேந்திரன் தலைமையிலான மகாசபைக் கூட்டத்தினை தொடர்ந்து, சந்தண மண்டபத்தில் பூசை ஆராதனைகள் இடம்பெற்று கொக்கட்டி மரம் கொடியேற்றப்பட்டது. அதனைத்

02 ஆம் பக்கத்தில்...



















## கிண்ணியா பிரதேச எல்லைகள் ஒடுங்கிவருகின்றன

தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது,

கிண்ணியாபிரதேசம்முஸ்லிம்மக்கள்செறிந்து வாழ்கின்ற ஒரு பகுதியாகும். திருகோணமலை மாவட்டத்தில் சனஅடர்த்தி கூடிய பகுதியாகவும் கிண்ணியாகாணப்படுகிறது. இதன்எல்லையைக் குறைக்கும்முயற்சிகள்தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுவரைக்கும் கிண்ணியா பிரதேசசெயலகத்துக்குட்பட்ட எல்லைகள்சரிவர இடப்படாத காரணத்தால், நாளுக்கு நாள் பரப்பளவு குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மறுபுறம் மணல் அகழ்வும் கடலரிப்பும் பரப்பளவைக் குறைத்து வருகிறது. இது சம்பந்தமாக கிண்ணியாவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதேச செயலாளரும் இணைந்து, இதற்கான தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார்.

## ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை வரவேற்றுள்ள

அமைதி, நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பணியாற்றும் ஜனாதிபதியின்அர்ப்பணிப்பை தாம் வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதற்காக பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விடயத்தில் ஐநாவுடன் தாம் இணைந்து பணியாற்ற கடமைப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி குறிப்பிட்டதை மேற்கோள் காட்டி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

## தீர்வு கிடைக்காவிட்டால் பாடசாலைக்கு

ஆனபோதும் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால், குறித்த சுற்றுநிருபத்தை ஏற்று பாடசாலைகளுக்கு செல்ல மாட்டோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் ஆசிரியர் சேவை சங்கம் உள்ளிட்ட போராட்டத்தில் ஈடுபடும் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தமது சம்பள முரண்பாட்டு பிரச்சனைக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரையில் தொழிற்சங்கப் போராட்டத்தை தொடருவோம் என்று அந்த சங்கங்கள் கூறியுள்ளன.

இதேவேளை கடந்த வாரத்தில் பிரதமருடனான சந்திப்பின் போது அறிவிக்கப்பட்டவாறு கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்குமென்று எதிர்பார்ப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இன்றைய தினத்தில் தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் புதன்கிழமை நாடு முழுவதும் உள்ள அதிபர், ஆசிரியர்களை கொழும்புக்கு அழைத்து பாரிய போராட்டமொன்றை நடத்துவோம் என்று ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுபீட்சத்தின் நோக்கு பிரகடனத்தின் படியான

மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணியானது காந்திப் பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சுற்றுவட்டம் வரை சென்று மீண்டும் காந்திப் பூங்காவில் நிறைவுற்றிருந்தது.

இதன் போது, வாக்குறுதியளித்ததன் பிரகாரம் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வினைப் பெற்றுத் தா, அதிபர் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்து, அதிபர் ஆசிரியர் சேவையை அகப்படுத்தப்பட்ட சேவையாக அங்கீகரி, 24 வருட அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கு, கல்வியில் இராணுவ மயமாக்கலை நீக்கு, அதிபர் ஆசிரியர் மாணவர்களின் மன அழுத்த செயற்பாடுகளை நிறுத்து, அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடு தொடர்பிலான உயர்நீதிமன்ற தீர்ப்பை அமுல்ப்படுத்து, கொத்தலாவல பாதுகாப்பு சட்டமூலத்தை இரத்துசெய் போன்ற பதாதைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி இரணைமடு சந்தியில் அடாத்தாக

சுவரை அகற்றுமாறு கரைச்சி பிரதேசசபையினர் கூறியிருந்தனர்.

எனினும் குறித்த கட்டுமானம் படையினரால் அகற்றப்படாமலே உள்ளது.

இதனையடுத்து சட்டரீதியாக அதனை அகற்றுவது தொடர்பாக கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் நேரில் சென்று ஆராய்ந்துள்ளதாக கூறப்படுகின்றது.

## மண்டூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம்

தொடர்ந்து சுவாமி உள்வீதி, வெளிவீதியுலா வலம் வருதலும் நடைபெற்றது.

பெரிய கப்புகனார் வே. விநாயகமூர்த்தி தலைமையில் பூசை ஆராதனைகள் நடைபெற்றதுடன், ஐம்பதுக்கு உட்பட்ட ஆலய அறங்காவலர் சபையினர் சுகாதார விதிமுறைகளுடன் கலந்து கொண்டனர்.

கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தின் திருவிழா தொடர்ச்சியாக 20 நாட்கள் இடம்பெற்று, எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் கொரோனாதொற்று 20 ஆயிரத்தை தாண்டியது!

படுவேகமாக தாக்கத்தொடங்கியுள்ளது.

குறிப்பாக கல்முனை மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பிரதேசங்களில் கூடுதலான தாக்கத்தை செலுத்த ஆரம்பித்துள்ளது.

தொற்றுக்களின் எண்ணிக்கை 20ஆயிரத்தை தாண்டியுள்ளது. நேற்று(02)திங்கட்கிழமை பதிவின்படி எண்ணிக்கை 20ஆயிரத்து 21ஆக உயர்ந்துள்ளது என கிழக்கு மாகாண சுகாதாரசேவைத் பணிப்பாளர் டர்க்டர் ஏ.ஆர் எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கில் மரணித்தவர்களின் எண்ணிக்கை 350ஐ தாண்டியுள்ளது. அங்கு இதுவரை 364 பேர் பலியாகியுள்ளனர்.இவர்களில் 339பேர் மூன்றாவது அலையில் மரணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டு.மாவட்டத்தில் 103பேரும் அம்பாறை பிராந்தியத்தில் 39 பேரும் திருமலை மாவட்டத்தில் 148பேரும் கல்முனைப்பிராந்தியத்தில் 74பேரும் மரணித்துள்ளனர்.

இறுதியாக சாய்ந்தமருதில ஒருவர் கொரோனவுக்கு பலியாகியுள்ளனர்.

நேற்று(2)வரை 20021பேருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டுள்ளது.இவர்களில் 18529பேர் குணமாகி வீடு சென்றுள்ளனர்.1136 பேர் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

**10லட்சம் பேருக்கு தடுப்பூசி தேவை!**

கிழக்கு மாகாணத்தில் தடுப்பூசிக்கு தகுதி பெற்றவர்களாக 10லட்சத்து 40ஆயிரத்து 4%1பேர் உள்ளனர். இதுவரை 6லட்சத்து 65ஆயிரத்து 349 பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதென கிழக்கு மாகாண சுகாதாரதிணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர். எம்.தௌபீக் தெரிவித்தார்.

மட்டு.மாவட்டத்தில் 227953பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 112089 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 163863 பேருக்கும் கல்முனைப்பிராந்தியத்தில் 161444பேருக்கும் தடப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை கிழக்கு மாகாணத்திற்க இதுவரை 8லட்சத்து 50ஆயிரம் வக்சீன்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் முதலாவது டோசாக 7லட்சத்து 75ஆயிரம் வக்சீன்களும் இரண்டாவது டோசாக 75ஆயிரம் வக்சீன்களும் கிடைக்கப்பெற்றன.

இவற்றில் முதலாவது டோஸில் கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட %லட்சத்து 75ஆயிரம் சைனோபாம் தடுப்பூசிகளில் 5லட்சத்து 94ஆயிரத்து 238ஊசிகள் ஏற்றப்பட்டுள்ளதென கிழக்கு மாகாண சுகாதார திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர். எம்.தௌபீக் மேலும் தெரிவித்தார்.

மட்டு.மாவட்டத்தில் 204406பேருக்கும் அம்பாறை பிராந்தியத்தில் 89485 பேருக்கும் திருமலை மாவட்டத்தில் 138903பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன. இறுதியாக கிடைக்கப்பெற்ற கல்முனைப்பிராந்தியத்தில் முதல் டோசாக இதுவரை 1லட்சத்து 61ஆயிரத்து 44பேருக்கு வக்சீன்கள் மிகத்துரிதமாக ஏற்றப்பட்டுள்ளன.




## தொழில்நுட்பத்திற்கும் முதலீட்டுக்காகவும் எமது நிலத்தை சீனாவிற்கு தாரைவார்க்க

செயலகத்திற்குட்பட்ட கௌதாரி முனையில் அமைக்கப்பட்டுள்ள கடல்அட்டை பண்ணை தொடர்பாகவே நேற்றைய தினம் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின் பின் ஊடக சந்திப்பு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஊடக சந்திப்பில் வட கிழக்கின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையை பொறுத்த வரையில் எமது ஆட்சியாளர்கள் எங்களுடைய வளங்களை பல நாடுகளுக்கு விற்கின்ற அதேவேளை பல நாடுகள் எமது வளங்களை சூரையாடுவதற்கு வழி வகுத்துள்ள வேளையிலே அதிக ஆதிக்கத்தை சீன ஆட்சியாக மாறிக்கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கின்றோம்.

கடந்த காலங்களில் பார்க்கின்ற வேளை சீனர்களுடைய ஆதிக்கம் வடபகுதியிலும் குடிகொள்கின்றதையும் காணக்கூடியதாக உள்ளது எனவும் தெரிவித்திருந்தார். மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப்பிரதேச கௌதாரி முனையில் மீனவ சங்கங்களே அறியாமல் அவர்களது அனுமதியும் இல்லாமல் சீன பிரஜைகள் இரண்டு ஏக்கருக்கு உட்பட்ட காணிகளுக்குள்ளே அட்டைக்குஞ்சுகளை வளர்ப்பதற்கான பண்ணைகளை உருவாக்கியிருக்கின்றனர்.

யாருடைய அனுமதி பெற்று இதை இவர்கள் செய்திருக்கிறார்கள் என்ற கேள்வியை உருவாக்கியுள்ளது எனவும் தெரிவித்தார்.மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடலின் போதும் எந்தவிதமான அனுமதியும் தம்மிடம் பெறாமல்தான் குறித்த அட்டை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்திருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் கடந்த காலங்களில் கடல்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார் குறித்த பண்ணை எங்களுக்கு தொழில்நுட்பத்தையும் முதலீடையும் தருவதாக இருக்கிறது ஆகவே அவர்கள் சீன பிரஜைகளா அல்லது வேறு நாட்டு பிரஜைகளா என்பதல்ல, எங்களுக்கு முக்கியம் முதலீடும் தொழில்நுட்பமும் என்று கூறியிருந்தார்.

அவ்வாறானால் தொழில்நுட்பத்திற்கும்,முதலீட்டுக்காகவும் எங்களுடைய நிலத்தை மற்றவருக்கு தாரைவார்த்து அல்லது விற்பது சரியான விடயமா என்று நாங்கள் பார்க்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கம் அபிவிருத்தி என்ற போர்வையில் எங்களுடைய வளங்களை மற்றவர்களுக்கு கொடுக்கின்ற முயற்சிகளில் முயல்கின்றதா என்ற கேள்வி எங்களுக்குள்ளே இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

குறித்த நிகழ்வில் வடமாகாண கடற்றொழிலாளர் இணைய தலைவர் வீ.சுப்பிரமணியம் , தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வட கிழக்கின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன்,பூநகரி கடற்றொழிலாளர் சமாச தலைவர் யோசப் பிரான்சித் மற்றும் மீனவ சங்கங்களின் தலைவர்கள் தொழிலாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மாதம் 30 ஆயிரம் ரூபா வீதம் 24 வருட ஆசிரியர்களின் சம்பளம் அரசால் கோள்ளை

(எஸ். சதீஸ்)

கடந்த 1997 ம் ஆண்டு இருந்து 24 வருடங்களாக தலா மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா வீதம் எங்களுடைய சம்பளத்தை கொள்ளையிடப்பட்டுள்ளது எனவே இந்த சம்பள முரண்பாட்டை தீர்க்க முடியாதா கல்வி அமைச்சர் இராஜாங்க அமைச்டகள் உட்பட 4 அமைச்சர்களும் ஏன் இவைத்துக் கொண்டிருக்கின்றீர்கள் என இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயரூபன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் 7 கோரிக்கைகளை முன்வைத்து திங்கட்கிழமை இலங்கை ஆசிரியர் சங்கம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டது இதன்போது இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயரூபன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

2008 ம் ஆண்டு சம்பள முரண்பாடு தொடர்பாக உயர்தர பரீட்சைகளை பஷ;கரித்து இலங்கை அரசுக்கு எதிராக முதல் முதலாக அறிவித்தோம். இதனை தொடர்ந்து 2008ம் ஆண்டு 208 இலக்கமிடப்பட்ட உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைவாக அந்த உயர் நீதிமன்ற நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அதிபர் ஆசிரியர்களுடைய சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது எனவே அந்த தீர்ப்பை மதித்து எங்களுடைய சம்பள முரண்பாடை தீர்க்கும் வரை நாங்கள் இந்த போராட்டத்தில் ஈடுபடுகின்றோம்

காலத்துக்கு காலம் பந்துவிளையாட்டில் ஈடுபட்டிருக்கும் இந்த இலங்கை அரசாங்கங்கள் இருந்தபோதும் இந்த நாட்டின் அரசாங்கத்துக்கு ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகின்றோம் 2019 பெப்பிரவரி மாதம் 3ம் திகதி தேசிய பிரச்சனையாக கருதி இந்த போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.



2019 குளோசிஸ்டம் என்ற தீர்வுக்கு கொண்டுவந்து இந்த சம்பள முரண்பாட்டை தீர்ப்பதாக வாக்குறுதியளித்திருந்தனா.; இதற்கு பின்னர் 2020 ம் ஆண்டு இந்த அரசு தமது அமைச்சர்ரவை தீர்மானத்தில்; இதனை அங்கீகரித்திருந்தனர் எனவே அந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு என்ன நடந்தது இதனை இது வரை நடை முறைப்படுத்தப்படவில்லை இதன் பின்னர் இடைக்கால சுற்று நிருபம் வெளியிடுவதாக அறிவித்தபோதும் இதுவரை அதனை வெளியிடவில்லை. இந்த நாட்டினுடைய சுபீட்சத்தின் நோக்கு என்கின்ற ஜனாதிபதியின் கொள்கை திட்டத்தில் வெளியீட்டு புத்தகத்தில் 20 பக்கத்தில் அதனை தீர்த்துவைப்பதாக தெரிவிக்கப்பட்டது எனவே ஜனாதிபதியிடம் கேட்கின்றோம் அதற்கு என்ன நடந்தது 31 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தரவேண்டியவர்கள் வெறும் 3 ஆயிரத்தி 100 ரூபா தருவதாக பேச்சுவார்த்தையில் தெரிவித்து எஙடகளை வெக்கப்படுத்தியுள்ளனர் எனவே இதனை நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிக்கின்ற ஆசிரியர் அதிபர்களை வெக்கப்படுத்தியதாக கருதுகின்றோம்.

இந்த அதிபர் ஆசிரியர்களுடன் விளையாட வெளிக்கிட்ட வடமேல் மாகாணத்தின் மாகாண சபை உறுப்பினருக்கு என்னன நடந்தது என தெரிரியும் அவ்வாறே பதுளையினுடைய பெண்கள் கல்லூரி அதிபருக்கு என்ன நடந்தது என தெரியும் நாங்கள் தான் நல்லாட்சியை கொண்டுவந்தோம் எதிர்காலத்திலும் மாற்றம் ஒன்றை கொண்டுவரவேண்டும்;. எனவே எங்களின் இந்த போராட்டத்தை அங்கீகரிகாவிடின் போராட்ட வடிவங்கள் மாறும் 199% ம் ஆண்டு இருந்து 24 வருடங்களாக மாதாற்தம் 30 ஆயிரம் ரூபாவீதம் எங்களுடைய சம்பளம் கொள்ளை யிடப்பட்டுள்ளது.

அமைச்சர் நாமல் பராஜபஷ மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 விளையாட்டு மைதானங்களை புனநிடமானம் செய்கின்றீர்கள் அவர்வாறே நாட்டில் எத்தனை விளையாட்டு மைதானத்தை புனநிர்மானம் செய்கின்றீர்கள் என கேட்கவிரும்புகின்றோம். அவ்வாறே கல்வி அமைச்சில் கல்வி அமைச்சர் இராஜாங்க அமைச்சர் உட்பட 4 அமைச்சர்கள் இருக்கின்றார்கள். இவர்களால் இந்த சம்பள முரண்பாட்டை தீர்க முடியவில்லை என்றால் ஏன் இவர்களை வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள் என கேள்வி எழுப்பியுள்ளார்.

# மட்டக்களப்பில் அரச நிறுவனங்களுக்கு கோரோனா வைரஸ் தோற்றுத் தடுப்பு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வைப்பு







(ரக்ஸனா)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் மட்டக்களப்பில் உள்ள அரச நிறுவனங்கள் சிலவற்றுக்கு கொரோனா வைரஸ் தொற்றுத் தடுப்பு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

சனிக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சமன் செனவிரெட்ன தலைமையிலான குழுவினரும் மாவட்ட சர்வமதக் குழு அங்கத்தவர்களும் இணைந்து இந்த உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மட்டக்களப்பு மாநகர சபை காத்தான்குடி பிரதேச செயலகம் நொச்சிமுனை கிராம அலுவலர் காரியாலயம் ஆகியவற்றின் பாவனைக்காக தெளி கருவிகள் பாதுகாப்பு அங்கிகள் கைகழுவும் தொட்டி என்பன வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காலத்தில் காத்திரமான பணிகளை ஆற்றியமைக்காக மனித உரிமைகள் சிவில் குழுவுக்கு சுமார் ஒன்றரை இலட்ச ரூபாய் பெறுமதியான மடிக்கணினியும் தேசிய சமாதானப் பேரவையினால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவரான கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம் கலந்து கொண்டு மடிக்கணினியை வழங்கி வைத்தார்.

# திருகோணமலையில் ஆசிரியர்கள் அதிபர்கள் கவனயீர்ப்பு போராட்டம்





(கதிரவன்)

ஆசிரியர்களின் 24 வருட சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்யக் கோரியும் ஆசிரியர்கள் அதிபர்கள் மீது பளுக்களை சுமத்துவதை நீக்க கோரியும் திருகோணமலையில் ஆசிரியர்கள் அதிபர்கள் இணைந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை திங்கட்கிழமை நடத்தினார்கள்.

மட்கோ சந்தியில் ஒன்றுகூடிய இவர்கள் கண்டி வீதி வழியாக கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை கோசங்களை எழுப்பியும் பதாகைகளை தாங்கியும் ஊர்வலமாக சென்றனர்.

ஆளுநர் அலுவலகத்தின் முன்னால் போராட்டத்திலும் ஈடுபட்டார்கள்.

ஊர்வலத்திற்கு வாகனங்களால் தடை ஏற்படாதவாறு பெருமளவிலான பொலிசார் காவலுக்கு நிறுத்தப்பட்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் குரு அபிமானி திட்டம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்

பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ச அவர்களின் திட்ட அமுலாக்கத்துக்கு அமைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கும் ''குரு அபிமானி'' நிகழ்வு நேற்று தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. மகளிர் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி இராஜாங்க அமைச்சின் ஆலோசனைக்கு அமைய முன்பள்ளி ஆசிரியைகளுக்காக இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி அவர்களால் முதற்கட்டமாக 12 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு இக் கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.அன்வர்தீன் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகளும் கலந்து சிறப்பித்தனர்.



# மட்டக்களப்பு கலைஞர்களுக்கு களம் அமைத்துக்கோடுத்த மூன்று குறுந்திரைப்படங்களின் வெளியீட்டு விழா!!





இலங்கையின் தலைசிறந்த இயக்குனர்களில் ஒருவராக திகழும் மட்டக்களப்பைச் சேர்ந்த கே.கோடீஸ்வரனின் இயக்கத்திலும் விஸ்ணுஜனின் ஒளிப்பதிவிலும் மட்டக்களப்பு கலைஞர்களின் பங்களிப்புடனும் இந்த குறுந்திரைப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டை விட்டு தொழிலுக்காக சட்ட ரீதியற்ற முறையில் வெளிநாடு செல்ல முற்படும்போது அவர்கள் எதிர்கொள்ளும் சமூக பிரச்சினைகள், அவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இந்த நாட்டிலும் வாழமுடியும் என்பதை இவ்வாறான புலம்பெயர்தலை தடுக்கும் என்பதையும் மூன்று குறுந்திரைப்படங்கள் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது குறுந்திரைப்படங்கள் திரையிடப்பட்டதுடன் திரைப்படத்திற்கு பங்களிப்பு செய்த கலைஞர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் குறுந்திரைப்படங்களை இயக்கியவர்கள் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது இயக்குனர் கோடீஸ்வரன் லி(f)ட் அமைப்பினால் குறுந்திரைப்பட செம்மல் என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

முறையற்ற புலம் பெயர்வை கட்டுப்படுத்துதல்'' எனும் வேலை திட்டத்தின் கீழ் ஓர் அங்கமாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட பற்று, பாசம் மற்றும் பிடிவாதம் எனும் மூன்று குறுந்திரைப்படங்களின் உத்தியோகபூர்வ வெளியீட்டு விழா மட்டக்களப்பில் நடைபெற்றது.

லி(f)ட் அமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த குறுந்திரைப்படங்கள் முறையற்ற வகையில் நாட்டை விட்டுச்செல்வோர் மற்றும் செல்ல நினைப்போர் எதிர்கொள்ளும் சவால்களை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் வெளியீட்டு நிகழ்வு மட்டக்களப்பு விஜயா திரையரங்கில் லி(-f)ட் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் திருமதி ஜானு முரளிதரனின் தலைமையின் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்னம் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண சமூக சேவைகள், கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.நவநீதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அம்கோர் அமைப்பின் நிதியுதவியுடன் லி(f)ட் அமைப்பின் திரைப்பட பிரிவினால் மட்டக்களப்பு கலைஞர்களின் முழுமையான பங்களிப்புடன் இந்த மூன்று குறுந்திரைப்படங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.




# மீண்டும் திருமண,போது நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட வாய்ப்பு

டெல்டா வைரஸ் பரவல் தாக்கங்களை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் இடம்பெறும் திருமண நிகழ்வுகள், பொது நிகழ்வுகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கொவிட் கட்டுப்பாட்டு செயலணிக்கு வலியுறுத்தியுள்ளார்.

நாடு மிகவும் அச்சுறுத்தலான கட்டத்தில் உள்ளது, தடுப்பூசிகளை ஏற்றுவது நல்ல விடயம் என்றாலும், அது மட்டுமே பாதுகாப்பு அல்ல. மக்கள் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றி தத்தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்வரும் மாதங்கள் எமக்கு சவால் மிக்கவை என்பதையே நிபுணர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே எமது சுகாதார தன்மைகள், எம்மால் தாக்குப்பிடிக்க முடிந்த அளவு என்பவற்றை கருத்தில் கொண்டே தீர்மானம் எடுக்க வேண்டும். இந்தியா போன்று ஒரு நிலை இலங்கையில் ஏற்பட்டால் எம்மால் நிச்சயமாக தாக்குப்பிடிக்க முடியாது என உபுல் ரோஹன சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது உள்ள நிலைமையில் திருமண நிகழ்வுகள், ஏனைய மத, கலாசார நிகழ்வுகள், பொது நிகழ்வுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதற்கான அறிவிப்பை நாம் கொவிட் செயலணிக் கூட்டத்தில் விடுத்துள்ளோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்

ECDL
Office
Windows 10



தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

Aaran Ayurveda
& Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# வாழைச்சேனையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபாம்



(ந.குகதர்சன்)

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபாம் கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரி.எஸ்.சஞ்ஜீவ் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இந்தவகையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கொவிட் 19 தடுப்பூசிகள் நேற்று திங்கட்கிழமை ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றது.

கொவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு சினோபாம் தடுப்பு ஊசிகள் கிடைக்கப்பெற்ற நிலையில் பதினான்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரனின் வழிகாட்டலில் நடைபெற்று வருகின்றது.

# சட்டத்துறை நீதித்துறை நிருவாகத்துறை ஆகிய மூன்று துறைகளும் முறையாக இயங்கி மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும்





(ரக்ஸனா)

சட்டத்துறை நீதித்துறை நிருவாகத்துறை ஆகிய மூன்று துறைகளும் முறையாக இயங்கி சிறுவர் உரிமைகளையும் மனித உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமதக் குழு அங்கத்தவர்களுக்கு முரண்பாடு நிலைமாற்றத்திற்கான பன்மைத்துவ செயற்பாடு எனும் பயிலரங்கும் நிருவாகத் தெரிவும் மட்டக்களப்பு கல்லடி பிரிட்ஜ் வியூ விடுதியில் இடம்பெற்றது.

மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஆர். மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சர்வமதக் குழு அங்கத்தவர்கள் இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் தேசிய நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் சமன் செனவிரெட்ன தேசிய நிகழ்ச்சி இணைப்பாளர் ரஷிகா செனவிரெட்ன நிகழ்ச்சித் திட்ட அதிகாரி எஸ். கமலதாசன் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம் உட்பட இன்னும் பல வளவாளர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சிறுவர்கள் பெண்கள் மற்றும் வீட்டு வன்முறை தொடர்பான விரிவுரையை நிகழ்த்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் பல்வேறு சட்டங்கள் சிறுவர் என்ற சொல்லை வேறுபட்ட வழிகளில் வரையறுப்பதாகவும் எனினும் 1989ஆம் ஆண்டின் நொவெம்பெர் 20ஆம் திகதிய சிறுவர் உரிமைகள் பட்டயத்தில் 18 வயதிற்குக் குறைந்த அனைத்து மனிதப் பிறவிகளும் சிறுவர்களாவர் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 29 வீதமாகவுள்ள சிறுவர்கள் வறுமை யுத்தம் நகரமயமாக்கல் அரசாங்கக் கொள்கைகள் போன்ற அம்சங்களினால் பாதிக்கப்படுவோராக உள்ளனர்.

சுமார் 50 இற்கும் அதிகமான சட்டங்கள் சிறுவர் தொடர்பானதாக இருக்கின்ற போதிலும் 1998ஆம் ஆண்டின் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபைச் சட்டம் மிகவும் முக்கியமானது என்றார்.

இந்நிகழ்வில் மாவட்டத்தில் முரண்பாடு ஏற்படக்கூடும் என்று கருதப்படும் இரண்டு பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய மாவட்ட சர்வமதக் குழு அங்கத்தவர்களும் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏறாவூர்ப்பற்று பிரதேசத்திற்கான பிரதிநிதியாக கே. சங்கீதா மற்றும் காத்தான்குடி பிரதேசத்திற்கான பிரதிநிதியாக மத்தியஸ்த சபைத் தலைவர் எம்.ஐ. உசனார் ஆகியோருடன் மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஆர். மனோகரன் உட்பட ஏழு பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.



# ஹிாலினிக்கு நீதி கிடைக்க வேண்டும்

## லிந்துலை தொழிலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(க.கிஷாந்தன்)

டயகம சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோஷத்துடன் நேற்று காலை பணிக்கு செல்லாது லிந்துலை மட்டுக்கலை தோட்டத் தொழிலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 9.30 மணிக்கு மட்டுக்கலை தேயிலை தொழிற்சாலை அருகிலிருந்து அட்டன் - நுவரெலியா பிரதான வீதி வரை பேரணியாக சென்று தமது போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

பேரணியில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். இறுதியில் மரணித்த ஹிஷாலினிக்கு நீதி கிடைக்கவும் ஆத்ம சாந்திக்காகவும் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன.

அத்துடன், வீட்டுப் பணியாளர்களாக செல்லும் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்தும், பெண்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவலியுறுத்தியும் இதன்போது குரல் எழுப்பட்டது.

# வளத்தாப்பிட்டி பள்ளிவாயலுக்கு ரஹ்மத் அமைப்பினால் பொதுக் கிணறு



அஸ்லம் எஸ்.மௌலானா

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பிட்டி மஸ்ஜிதுல் தௌர் பள்ளிவாயலுக்கு ரஹ்மத் சமூக சேவை அமைப்பினால் பொதுக்கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பள்ளிவாயல் நிர்வாகிகள் விடுத்த வேண்டுகோளையேற்று அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் ஏற்பாட்டில் வை.டபிள்யூ.எம்.ஏ. (YWMA) நிறுவனத்தின் அனுசரணையுடன் இக்கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இதனை பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (01) இடம்பெற்றது. இதில் ரஹ்மத் மன்சூர் உட்பட அமைப்பின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதன்போது குறித்த பள்ளிவாயலில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் ரஹ்மத் மன்சூர் முன்னெடுக்கும் சேவைகளுக்கு பள்ளிவாயல் நிர்வாகிகளினால் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டதுடன் விசேட துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது.

ரஹ்மத் சமூக சேவை அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பள்ளிவாயல்கள், கோவில்கள், விகாரைகள் மற்றும் கிறிஸ்தவ ஆலயங்கள் பலவற்றுக்கு பொதுக்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருவதுடன் வசதி குறைந்த குடும்பங்களுக்கு குழாய்நீர் இணைப்பு, நிலக்கீழ் அடி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் இந்திய துணை தூதுவர் பதவியேற்பு

(இஃஜாஸ் ஏ பரீட்)



யாழ்ப்பாண இந்திய துணை தூதுவராக திரு ராகேஸ் நடராஜ் நேற்று திங்கட்கிழமை தனது அலுவலகத்தில் பதவியேற்றார்.

இவர் தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தை சேர்ந்தவர். இதற்கு முன் கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராக பணிபுரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சேதன பசளைகளுக்கான சகல மூலப்பொருட்களும் மன்னாரில் காணப்படுவதால் விவசாயிகள் இதில் அக்கறை செலுத்த வேண்டும்'

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு இப்பகுதியில் சேதன பசளைகளுக்குகான சகல மூலப் பொருட்களும் காணப்படுவதால் சேதன பசளைகளை பாவித்து இவ் பகுதி விவசாயிகள் சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் அசோலா என்ற நீர் தாவரத்தையும் வயல்களுக்கு பாவிக்கும் தன்மையையும் அறிந்து செயல்பட வேண்டும் என மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி சாகிரா பாணு இவ்வாறு தெரிவித்தார்.

சேதன பசளை தொடர்பாக மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி சாகிரா பாணு ஊடகங்களுக்கு ஊடாக தெரிவிக்கையில்

கடந்த சில வருடங்களாக விவசாய திணைக்களமானது சேதன விவசாயத்தை நோக்கி உற்பத்திக்கான செய்கைக்காக இவ் சேதன விவசாய முறையை நகர்த்திக் கொண்டு வருகின்றது.

இக்காலக்கட்டத்தில் இவ் வருடத்துக்கான நெற் செய்கையோ அல்லது மேட்டுநிலப் பயிர் செய்கையையோ முழுக்க முழுக்க சேதனப் பசளையை நம்பியே ஒவ்வொரு விவசாயிகளும் நம்பி செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

இந்த சேதன விவசாயமானது மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் தற்பொழுது கடினமான செயல்பாடாக இருந்தாலும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதில் பல சாத்தியமான நிலைபாடுகள் காணப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மாட்டெரு, கோழியெரு எருக்கலை போன்ற சகல தாவரப் பொருட்களும் இங்கு இலகுவாக கிடைக்கக்கூடியதாக காணப்படுவதால் சிறப்பான கூட்டெருவாக தயாரிக்கக் கூடிய நிலை இருக்கின்றது.

இதனால் நெற் செய்கைக்கோ அல்லது வீட்டுத் தோட்டங்களுக்கோ இவற்றை பாவிக்கக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன. இந்த கூட்டெருவை எப்படி தயாரிப்பது என்ன என்ன மூலப்பொருட்களை பாவிப்பது என்பதை மன்னார் மாவட்டத்திலுள்ள அந்தந்தப் பகுதிகளிலுள்ள விவசாய போதனாசிரியர்களை அனுகுவதன் மூலம் அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளதத்ணீன் மூலம் நீரை பெற்றுக் கொள்வதனால் இங்கு நெற் செய்கையானது சிறந்து விளங்குகின்றது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இவ் கட்டுக்கரைக்குளம் கிடைக்கப்பெற்றது மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

# கிழக்கு மாகாண புதியகல்விப்பணிப்பாளராக நகுலேஸ்வரி புள்ளநாயகம் கடமையேற்பு

(வி.ரி.சகாதேவராஜா)



கிழக்கு மாகாணத்துக்கான புதிய மாகாணக் கல்வி பணிப்பாளராகஇ 33வருட கல்விச்சேவையிலுள்ள இலங்கை கல்விநிருவாகசேவையின் மூத்த முதலாந்தர அதிகாரி திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக செயற்பட்டு வந்த எம்.ரி.எ.நிஸாம் ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளரான திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் நேற்று திங்கட்கிழமை திருமலை மாகாணகல்வித்திணைக்களத்தில் மாகாணக் கல்வி பணிப்பாளராக தனது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

துறைநீலாவணையைச் சேர்ந்த இவர், கடந்த 33வருடகாலமாக கல்வித்துறையில் ஆசிரியராக அதிபராக கோட்டக்கல்விப்பணிப்பாளராக வலயக்கல்விபணிப்பாளராக சேவையாற்றிவந்தவர்.

1988இல் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றிவேளை 1.6.1993 இல் இலங்கை கல்வி நிருவாக சேவைக்கான போட்டிப்பரீட்சையில் வடக்கு கிழக்கு மாகாணத்திலே அதிகூடிய புள்ளிபெற்று பொது ஆளணியில் தெரிவுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு ,மண்முனை மேற்கு கோட்டக்கல்விப்பணிப்பாளராக ஆரம்பத்தில் பணியாற்றிய அவர் பின்னர் பட்டிருப்பு வலயம் மற்றும் திருக்கோவில் வலயங்களில் மாறிமாறி வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 2009இல் இலங்கை கல்விநிருவாகசேவையின தரம் 1இற்குத் தெரிவானார்.

அன்றிலிருந்து நேற்று வரை சுமார் 12வருட காலம் இந்தப்பதவிக்கு காத்திருக்கநேரிட்டது. இருப்பினும் 2019இல் சந்தர்ப்பம் கிடைத்தபோதிலும் அவர் அதனை ஏற்கவில்லை.

இதேவேளை பட்டிருப்பு வலயத்தின் புதிய வலயக்கல்விப்பணிப்பாளராக இ.க.நி.சேவை தரம் 1ஐச்சேர்ந்த எஸ்.மகேந்திரகுமார் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# கொரோனா தொற்றால் சாய்ந்தமருதில் ஒருவர் மரணம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று (02) குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சாய்ந்தமருது-17, தண்டையல் வீதியைச் சேர்ந்த 54 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம். நிஸ்தார் தெரிவித்தார்.

இதன்படி சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை எட்டாக (08) அதிகரித்துள்ள அதேவேளை கல்முனைப் பிராந்தியத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்துள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் இதுவரை 133 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் தற்போது 08 பேர் கொரோனா சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 39 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை 1014 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் 1108 பேருக்கு ரெபிட் அன்டிஜன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் மேலும் தெரிவித்தார்.




# இரண்டரை மாதங்களின் பின்னர் கிழக்கில் அரச அலுவலகங்கள் வழமை நிலையில்

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

சுமார் இரண்டரை மாதங்களின் பின்னர் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச அலுவலகங்கள் வழமை போன்று இயங்கின.சகல அலுவலர்களும் ஆர்வத்துடன் அலுவலகங்களுக்கு சமுகமளித்திருந்தனர்.

வீட்டிலிருந்து அலுவலர்கள் பணி செய்யும் சுற்று நிருபம் ரத்துச் செய்யப்பட்டதையடுத்து இன்று முத சகல அலுவலர்களும் அலுவலகங்களில் கடமைக்கு சமுகமளித்திருந்தனர்.

சகல அலுவலர்களும் கொரோனா தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளதுடன் சுகாதார நடைமுறைகளையும் பேணியே கடமையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# தவிசாளர் ஜெயசிறில் மீது சேறு பூசும் நோக்கில் யாரோ சிலர் திட்டமிட்டு கருத்துக்களை தெரிவிப்பது ஆரோக்கியமானதல்ல

## பா.அரியநேத்திரன்

(துறையூர் சஞ்சயன்)

பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் மீது சேறு பூசும் நோக்கில் யாரோ சிலர் திட்டமிட்டு கருத்துக்களை தெரிவிப்பது ஆரோக்கிய மானதல்ல என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசு கட்சி ஊடகச் செயலாளருமான பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

தவிசாளர் ஜெயசிறில், இஸ்லாமிய மதம் சார்ந்து அவதூறான கருத்தை வெளியிட்டதாக சபையின் முஸ்லிம் பிரதிநிதிகள் சிலர் வெளியிட்ட கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த விடயத்தின் உண்மைத்தன்மையை அறிவதற்காக சம்பந்தப்பட்ட எமது கட்சியை சேர்ந்த தவிசாளர் ஜெயசிறிலை தொடர்பு கொண்டு கேட்டறிந்தேன். அவர் தாம் அப்படி முஸ்லிம் மதத்தையோ அந்த கடவுளையோ முஸ்லிம் மக்களையோ அவமானப்படுத்தும் விதமாக தாம் எந்தக் கருத்தையும் சமூக வலைத்தளங்களில் பதிவிடவிவும் இல்லை. எந்த இடத்திலும் பேசவும் இல்லை வேறு யாரோ இட்ட பதிவுகளை வைத்துக் கொண்டு தம்மீது சில முஸ்லிம் சகோதரர்கள் தமது அரசியல் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ளாத சிலர் தம்மீது சேறு பூசுகிறார்கள் என்பதை என்னிடம் கூறினார்.

பொறுப்பு வாய்ந்த தமிழ்தேசிய கூட்டமைப்பு மக்கள் பிரதிநி ஒருவர் ஏனைய மதங்களை அவதூறாக பேசியிருந்தால் அது தவறு என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இந்த விடயம் தொடர்பாக தற்போது பொலிசாரிடம் பல முஸ்லிம் பிரதிநிதிகள் முறைப்பாடுகள் செய்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

காரைதீவு பிரதேசபை, தமிழ் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளை கொண்டு இயங்கும் ஒரு ஒற்றுமையான பிரதேச சபையாகும். அங்கு இடம்பெறும் அபிவிருத்தி வேலைகள், சிரமதானப் பணிகள், வீதி துப்பரவுப்பணிகள், மின்குமிழ் பொருத்தும் பணிகள் எல்லாமே இனப்பாகுபாடுகள் இன்றி எமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் தவிசாளர் ஜெயசிறில் மிகவும் நேர்மையாகவும் பாரபட்சம் இன்றியும் ஒற்றுமையாகவும் கடந்த பல வருடங்களாக செய்து வருவதையும் துணிச்சலாக பல அபிவிருத்திகளை முன்னெடுப்பதையும் நாம் அறிவோம்.

பொறுப்பு வாய்ந்த கூட்டமைப்பு மக்கள் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் மதத்தை அவமானப்படுத்தும் விதமாக கருத்துக்களை தெரிவித்திருப்பின் தவறு என்பது கட்சி தலைமைக்கு நன்கு விளங்கும். அதற்காகவே சம்பந்தப்பட்ட தவிசாளருடன் தொடர்பு கொண்டு இவ்வாறான கருத்துக்களை கூறியுள்ளீர்களா என்பதை கேட்டேன். அவர் அதை முற்றுமுழுதாக மறுத்தார் தாம் அப்படி மதம் சார்ந்த அவதூறான கருத்துகள் எதையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கவில்லை என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

தமிழ் முஸ்லிம் இனங்களுக்கு இடையே முறுகல் நிலையை தோற்றுவிக்கும் முயற்சியில் இரு இனங்களை சேர்ந்தவர்களும் முற்படுவது இன்றைய நிலையில் நல்லதல்ல. ஒருவர் தவறான கருத்தை தெரிவித்ததாக சந்தேகம் ஏற்படின் சம்பந்தப்பட்டவருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசித்தீர்ப்பதே சிறந்த அணுகுமுறையாகும்.

ஏட்டிக்குப்போட்டியாக ஊடகங்களிலோ சமூக வலைத்தளங்களிலோ அவதூறாக ஒருவர் மற்றவரை பற்றி கருத்துக்களை தெரிவிப்பது சமூக ஒற்றுமையை பாதிக்கும். இதேவேளை பொலிசாரிடம் முறையிடுவதனால் கருத்து முரண்பாடுகள் விரிவடையவும் வாய்ப்புகள் உள்ளது.

தமிழ் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து செயல்படும் காரைதீவு பிரதேசபை தொடர்ந்தும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதே எமது கூட்டமைப்பினதும் இலங்கை தமிழரசு கட்சியினதும் எதிர்பார்ப்பு.

ஏதும் மனக்கசப்புகள் ஏற்படின் நேராக பேசி பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்த்து தொடர்ந்தும் பிரதேச சபை ஒற்றுமையாக செயல்பட அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் மனக்கசப்புகளை மறந்து புரிந்துணர்வுடன் தொடர்ந்தும் செயலாற்றுமாறு கூட்டமைப்பின் சார்பாக வேண்டுகிறேன்.



ஒரு குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளை அந்த குடும்பத்தில் உள்ளவர்களால் தீர்வதைப்போன்றே ஒரு பிரதேச சபையும் ஒரு குடும்பம் போன்றே செயல்படவேண்டும். பிரச்சினைகள் வரும்போது அதைப் பேசி தீர்ப்பதே நல்லது. ஏட்டிக்குப் போட்டியான அறிக்கைகளாலும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் பதிவுகளாலும் இன முரண்பாடே வளர்ச்சிபெறும். சட்ட நடவடிக்கைகளும் பொலிஸ் விசாரணைகளும் நீண்ட முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என்பதை அனைவரும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் பீடத்தின் 8 ஆவது சர்வதேச ஆய்வரங்கு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடத்தின் 8 ஆவது சர்வதேச ஆய்வரங்கு கலாநிதி ஆர்.ஏ. சர்ஜுனின் ஒருங்கிணைப்பில் இஸ்லாமிய மற்றும் அறபுக் கற்கைகள் ஊடாக நம்பிக்கைசார்ந்த சமூக ஒத்திசைவை ஊக்குவித்தல் எனும் தொனிப்பொருளில் அறபு மொழி பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிரின் தலைமையில் நாளை புதன் கிழமை இணைய வழியில் நடைபெற உள்ளது.

இந்த சர்வதேச ஆய்வரங்கிற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எம்.எம். எம். நாஜிம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொள்ள உள்ளதுடன் இவ்வாய்



வரங்கின் தொடக்க நிகழ்வின் பிரதம பேச்சாளராக மலேசிய கெபங்ஸான் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி துணைப் பேராசிரியர் கலாநிதி அஹ்மத் ஸுனா வரி லோங் கலந்து சிறப்பிக்கிறார். இவ் வாய்வரங்கில் 86 ஆய்வுக் கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய் வாளர்களால் முன்வைக்கப்படவிருக்கின்றன என்பது விஷேட அம்சமாகும் என ஆய்வரங்கின் செயலாளர் கலாநிதி எஸ். றிபா மஹ்ரூப் தெரிவித்தார்.

# கட்டைபறிச்சான் உப அலுவலகம் மீள இயங்க வேண்டும்



(பொன்ஆனந்தம்)

பிரதேச சபையின் கீழ் உள்ள கட்டைபறிச்சான் உப அலுவலகம் ஆரோக்கிய மான அலுவலகமாக இயங்க வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மூதூர் பிரதேச சபை யின் செயலவை உறுப்பினர் திருமதி. த. ஜெயமாலா கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதேச சபையின் கட்டைபறிச்சான் உப அலுவலக பிரிவில் இன்று நடந்த உள்ளூராட்சி சட்டம் தொடர்பான செயலமர்வில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இங்கு தொடர்ந்து பேசிய ஜெயமாலா குறிப்பிடுகையில்,

கட்டைபறிச்சான் வட்டாரத்தைப்பொறுத்தமட்டில் யுத்ததின் முன்னர் இந்த அலுவலகம் ஆரோக்கியமாக செயற்பட்டது. அதன்பின்னர் இந்த அலுவலகம் இயங்கவில்லை. நூலகம்மட்டுமே தற்சமயம் செயற்படுகிறது.

இப்பிரதேச மக்கள் மூதூர் நகரத்திற்கே செல்லவேண்டிய நிலமை உள்ளது. எமது மக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் கடமை பொறுப்பு, சேவைகள் பற்றி தெளிவில்லாமல் உள்ளனர். அவர்கள் எம்மிடம் பாராளுமன்ற உறுப்பினரைப்போன்று வேலைவாய்ப்பை யும் கோருகின்றனர். எனவே நாம் எமது சபை அமர்வுகளில் சபையின் கடமை பொறுப்புக்களை, சேவைகளை தெளிவுபடுத்துங்கள் எனக்கோரி வந்துள்ளோம். அதற்கான இந்த சந்தர்பத்தை எமது பிரதேச சபைக்கு இளைஞர் அபிவிருத்தி அகம் ஏற்பாடு செய்து தந்துள்ளது.

எனவே எதிர்காலத்தில் கட்டைபறிச்சான் வட்டாரத்தின் உப அலுவலகம் எமது மக்களுக்கான ஆரோக்கியமான சேவையை மீண்டும் வழங்க முன்வர வேண்டும்.

அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவும் வலியுறுத்தி கேட்டுக் கொண்டார்.

இந் நிகழ்வில் உள்ளூராட்சி திணைக்கள சிரேஷ்ட ஆய்வு அதிகாரி ச. சர்வேஸ்வரன், அகத்தின் இணைப்பாளர் பொன் சற்சிவானந்தம், பிரதேச சபையின் செயலாளர் வ. சத்தியஜோதி, முன்னாள் சேனையூர் மத்திய கல்லூரி அதிபர். செ. சிறிதரன் உள்ளிட்ட சபை அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

டெவன் நீர்வீழ்ச்சியின் அண்மித்த பகுதியில் ( 2 கிலோமீற்றர் தூரத்தில் ) பெண் ஒருவரின்சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தனை நகரைச் சேர்ந்த வீரமலை மலர்விழி வயது (52) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த மாதம் 2%ம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்றவர் வீடு திரும்பாத நிலையில் 1.8.2021 மாலை டெவன் நீர்வீழ்ச்சியிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில் நீரோடையில் இவரின் சடலம் மீட்கப்பட்டது.

குறித்த பெண்ணின் சமுர்த்தி அட்டை, குடை மற்றும் காலணி (சிலிப்பர்) ஆகியன கடந்த வாரம் டெவன் நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்த திம்புள்ள பத்தனை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியா நடுவூற்றுப் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஒருவருக்கு வீடு அமைக்க அடிக்கல் நாட்டி வைப்பு

(எப்.முபாரக்,இஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பத்து வீட்டுத் திட்டம்,நடுவூற்று பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நபர் ஒருவருக்கு பெண்கள் உதவி நிறுவனத்தினால் வீடு ஒன்றினை அமைத்துக்கொடுப்பதற்கான அடிக்கல் நட்டி வைக்கும் நிகழ்வு பெண்கள் உதவி நிறுவனத்தின் தலைவி எஸ்.நஸீமா தலைமையில் நடைபெற்றது.

நடுவூற்றுப் பகுதியில் எட்டு வயது பெண் குழந்தையோடு வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற சுல்தான் அப்துல் ஹஸன் என்பவருக்கே இவ்வாறு பெண்கள் உதவி நிறுவனத்தினால் வீடு ஒன்று அமைத்துக் கொடுப்படவுள்ளது.

கிண்ணியா நடுவூற்று கிராம அதிகாரி மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்



போன்றோர் பெண்கள் உதவி நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இவ்வாறு வீடு அமைத்துக்கொடுப்பதற்கான அடிக்கல் நட்டி வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.




# காட்டு யானை கிராமத்திற்குள் புகுந்து துவம்சம்



ரக்ஸனா

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் எல்லைக் கிராமமான பாலையடிவட்டை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு புகுந்த காட்டுயானை அங்கிருந்த பயன்தரும் பல மரங்களை அழித்து விட்டுச் சென்றுள்ளதாக கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.அப்பகுதியில் மாலை லேளையானதும் தொடற்சியாக காட்டுயானைகளின் தொல்லைகளும், அட்டகாசங்களும் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை கிராமத்திற்குள் புகுந்த காட்டுயானையால் அப்பகுதி மக்கள் பெரும் அல்லோல கல்லோலப் பட்டுள்ளனர்.திடீரென மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த காட்டு யானையை மக்கள் ஒன்றிணைந்த துரத்துவதற்கு முனைந்துள்ள போதிலும், அந்த யானை அங்கிருந்த பயன்தரும் தென்னை, வாழை, பப்பாசி, உள்ளிட்ட பல மரங்களை அழித்து துவம்சம் செய்துவிட்டு ஒருவாறு கிராமத்தை விட்டு நகர்ந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மிக நீண்டகாலமாக தாம் எதிர்கொண்டுவரும் இந்த காட்டுயானைப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத்தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை எடுத்துக்கூறியும் அது இற்றைவரையில் தீர்க்கப்படாமல் தொடர்கதையாகவுள்ளமை தமக்கு மிகுந்த வேதனையளிப்பதாக அப்பகுதிவாழ் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.